ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பூங்கோதை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பூங்கோதை ॥

## சப்பாணிப் பருவம்

‡பூங்கோதை ஆய்ச்சி⋆ கடை வெண்ணை புக்குண்ண⋆
ஆங்கவள் ஆர்த்துப்⋆ புடைக்கப் புடையுண்டு⋆
ஏங்கி இருந்து⋆ சிணுங்கி விளையாடும்⋆
ஓங்கோத வண்ணனே! சப்பாணி⋆
ஒளி மணி வண்ணனே! சப்பாணி (1)

தாயர் மனங்கள் தடிப்பத்⋆ தயிர் நெய்யுண்-
டேய் எம்பிராக்கள்⋆ இரு நிலத்தெங்கள் தம்⋆
ஆயர் அழக⋆ அடிகள்⋆ அரவிந்த
வாயவனே! கொட்டாய் சப்பாணி!⋆
மால் வண்ணனே! கொட்டாய் சப்பாணி (2)

தாம்மோர் உருட்டித்⋆ தயிர் நெய் விழுங்கிட்டு⋆
தாமோ தவழ்வர் என்று⋆ ஆய்ச்சியர் தாம்பினால்⋆
தாமோதிரக் கையால்⋆ ஆர்க்கத் தழும் பிருந்த⋆
தாமோதரா! கொட்டாய் சப்பாணி!⋆
தாமரைக் கண்ணனே! சப்பாணி (3)

பெற்றார் தளை கழலப்⋆ பேர்ந்தங்கயல் இடத்து⋆
உற்றார் ஒருவரும் இன்றி⋆ உலகினில்⋆
மற்றரும் அஞ்சப் போய்⋆ வஞ்சப் பெண் நஞ்சுண்ட⋆
கற்றாயனே! கொட்டாய் சப்பாணி!⋆
கார் வண்ணனே! கொட்டாய் சப்பாணி (4)

சோத்தென நின்னைத்⋆ தொழுவன் வரம் தர⋆
பேய்ச்சி முலையுண்ட பிள்ளாய்⋆ பெரியன
ஆய்ச்சியர்⋆ அப்பம் தருவர்⋆ அவர்க்காகச்
சாற்றியோர் ஆயிரம் சப்பாணி!⋆
தடங்கைகளால் கொட்டாய் சப்பாணி (5)

கேவலம் அன்றுன் வயிறு வயிற்றுக்கு⋆
நான் அவல் அப்பம் தருவன்⋆ கருவிளைப்
பூவலர் நீள் முடி⋆ நந்தன் தன் போர் ஏறே இ⋆
கோவலனே! கொட்டாய் சப்பாணி!⋆
குடம் ஆடீ கொட்டாய் சப்பாணி (6)

புள்ளினை வாய் பிளந்து⋆ பூங்குருந்தம் சாய்த்து⋆
துள்ளி விளையாடித்* தூங்குறி வெண்ணெயை⋆
அள்ளிய கையால்⋆ அடியேன் முலை நெருடும்⋆
பிள்ளைப் பிரான்! கொட்டாய் சப்பாணி!⋆
பேய் முலை உண்டானே! சப்பாணி (7)

யாயும் பிறரும்⋆ அறியாத யாமத்து⋆
மாய வலவைப்⋆ பெண் வந்து முலை தர⋆
பேய் என்றவளைப்⋆ பிடித்துயிரை உண்ட⋆
வாயவனே! கொட்டாய் சப்பாணி!⋆
மால் வண்ணனே! கொட்டாய் சப்பாணி (8)

கள்ளக் குழவியாய்க்⋆ காலால் சகடத்தை⋆
தள்ளி உதைத்திட்டுத்⋆ தாயாய் வருவாளை⋆
மெள்ளத் தொடர்ந்து⋆ பிடித்தாருயிர் உண்ட⋆
வள்ளலே! கொட்டாய் சப்பாணி!⋆
மால் வண்ணனே! கொட்டாய் சப்பாணி (9)

‡காரார் புயல் கைக்⋆ கலிகன்றி மங்கையர் கோன்⋆
பேராளன் நெஞ்சில்⋆ பிரியாதிடம் கொண்ட
சீராளா⋆ செந்தாமரைக் கண்ணா!⋆ தண்துழாய்த்⋆
தாராளா கொட்டாய் சப்பாணி!⋆
தட மார்வா கொட்டாய் சப்பாணி (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥